# நீ 7 தெரிந்துக் கொள்ள வேண்டியவைகள்

## நீ தெரிந்துக் கொள்ள வேண்டிய ஏழு பொருள்கள்

முதலாவதாக - மரித்துக் கொண்டிருக்கும் எல்லா இனத்தையும் தேசங்களையும் சேர்ந்துள்ளஆணுக்கும் பெண்ணுக்கும் இணையற்ற இயேசு கிறிஸ்து நாதர் மூலமாக நித்திய ஜீவன் உண்டு என்ற மகிமைப் பொருந்திய பெரிய நற்செய்தியாகும்:

இவ்வளவு அருமையான பரம ஈவை நாம் புறக்கணித்தால், நித்திய ஜீவனை அடைவதற்குப் பதிலாக துணிகரமாக நாமே மரணத்தை தெரிந்துக்கொள்ளுகிறோம் என்பதாகும்.

நம் வாழ்க்கையின் முக்கிய பகுதியாக கவனத்தில் கொண்டு கர்த்தரின் வேதத்தை தினசரி படிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஞான முள்ள வர்களாகஇரட்சிப்பின் அடிப்படைக் காரணங்களைத் தெரிந்துக் கொள்ள முடியும்.

**சத்திய வேதாகம் கொடுக்கும் வாக்கு :-**

1. தேவன் ஒருவரே -

" இஸ்ரவேலே, கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்று மோசே (உபாக 6:4) லில் சொல்லியுள்ளார். இவ்வித மாகவே இயேசு கிறிஸ்துவும், மாற்கு 12:29 ல் சொல்லியுள்ளார். பவுல் அடியார் களும் தீமோத தேயுவுக்கும் தேவன் ஒருவரே என்று சொல்லியுள்ளார் 1 தீமோ 2:5 "நானே கார்த்தர், வேறொருவர் இல்லை", என்னைத் தவிர தேவன் இல்லை" என்று கர்த்தர் தாமே (ஏசா. 45:5) ல் சொல்லியுள்ளார். மீண்டும் கர்த்தர் சொல்லுகிறதாவது, "நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே

தேவன், எனக்குச் சமானமில்லை". (ஏசா 46:9) பவுல் அடியார்கள் " பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு" என்று கொரிந்தியர்களுக்கு (1 கொ 8:6) ல் சொல்லியுள்ளார். நமக்கு ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், என்று எபேசு சபையார்களுக்கு சொன்னார். (எபேசி 4:5)

2. இயேசு தாமே தேவகுமாரன் -

" தேவன் தன்னுடைய ஒரே பேருன குமாரனை உலகத்திற்கு தந்தருளி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார்" என்று இயேசு தாமே சொன்னார். (யோவா 3:16) யோவான் ஸ்நானகனால் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றப் போது " இவர் என நேச குமாரன்" என்று பிதாவே சாட்சி கொடுத்தார். (மத் 3:17) என் பிதா என்னிலும் பெரியவார யிருக்கிறார்" என்றார் இயேசு (யோ 14:28) அவர் குமாரனாக இருந்தும் பட்டபடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபிரே 5:8) நீ என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜனிப்பித்தேன்" என்று சங் 2:7 ல் சொல்லப்பட்டுள்ளது. " நான் அவருக்கு பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார்" 2 சாமு 7:14.

ஆகையால் இயேசு தேவகுமாரனும் பிதாவால் உலகில் அனுப்பப்பட்டவர் என்பதும் மிக தெளிவாகிறதல்லவா ?

3. நீதிமான்களுக்கு உலகிலேயே பலனுண்டு என்றால் பரலோகத்தில் இல்லை. இதை குறித்து இயேசு சொன்னவைகள்.

"சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" மத் 5:5 " பூமியை அரசாளுவார்கள்" என்று வெளி 5:10 சொல்லப்பட்டுள்ளது. "நீதிமானன்கள் பூமியைச்சுதந்தரித்துக் கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்" என்று சங்கீதக்காரன் சொல்லி இருக்கிறார். சங் 37:29, " உலகத்தை நியாயம் தீர்க்க வருகிறார்" என்றும் சொல்லப்பட்டுள்ளது சங் 98:9 " பூசக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக் கொள்ளுவார்கள்" ஏசா 26:9 இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொணடவர்களுக்கு ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுக்கப்படும். வெளி 2:26 " நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப் படுமே" நீதி 11:31 " வானங்கள் கர்ததருடைய வைகள், பூமியையோ மனுபுத்திரருக்கும் கொடுத்தார்" என்று சங் 115:16 சொல்லி இருப்பதைக் காணலாம். "அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார், அவருடைய நாம் ஒன்றாயிருக்கும் சகரி. 14:9 எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் (இயேசு) ஆளுகை செய்ய வேண்டியது" ! கொ 15:25.

மேற் கூறியுள்ள வேத வாக்குகள் படி பூமியிலேதான் பலன்கள் உண்டு, பரலோகததில் அல்ல என்பது விளக்கப்படடுள்ளன.

4. இயேசுவின் இரண்டாம் வருகையில் நியாயம் தீர்க்கும்மட்டும் மரித்துப்போன நீதிமானும துன்மாக்கனும் கல்லரையிலே ஓய்ந்திருப்பார்கள்.

பாதாளம் உம்மைத துதியாது, ஜீவனுள்ளோர் உம்மைத் துதிப்பார்கள், ஏசா 38:8 துன்மார்க்களுடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது;

பெலனற்று விடய்த்துப் பேனவர்கள் அங்கே இளைப்பபாறுகிருர்கள்" பக்தன் யோபு சொல்லி யுள்ளார். யோபு 3:17 " உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்களே பிரச. 9:5 அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பெருமையும் எல்லாம் ஒழிந்துப்போ யிற்று பிரச 9:6 அவன் ஆவி பிரியும் சவுலினுடைய செத்த ஆவியும் மரித்துப் போன தீர்க்கதரிசியாக சாமுவேல் ஆவியுடன் சேர்ந்ததே. நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னேடிருப்பீர்கள்.............. 1 சாமு 28:19) நீதிமானுகிய தாவீதி னுடைய மரித்த ஆவி பரலோகத்திற்க்கு போக வில்லையே " தாவீது பரலோகத் திற்க்கு எழுந்து போக வில்லையே. அப்போ (2:34) " மரணமத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை" சங் 6:5 இயேசு கிறிஸ்துவின் இரணமடாம் வருகை மட்டும் மரித்த ஆண்களும் பெண்களும் உணர்வற்றிருப்பார்கள். அவர் வல் லமையால் எழுப்புவார். (யோவா 6:40)

5. தேவன் ஆபிரகாமுடன் செய்துக் கொண்ட வாக்கு தத்தம்படி, இயேசுவினு ல் யூதர்கள் வழியாய் இரட்சிப்பு வருகிறது.

"யூதர்கள் வழியாக இரட்சிப்பு வருகிற தென்று" இயேசு தாமே சொன்னுர் யோவா. 4:22 "பூமியிலுள்ள எல்லா வம்சங்களையும் தேசங்களையும் ஆபிர காமிற்க்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று கர்த்தர் சொன்ன வாக்க க யூதமக்கள் நம்பியிருப்பதை போல விசுவாசிகளும் தேவனில் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். ஆதி.12:2-3. இதேவாக்கை ஈசாக்கிற்க்கும் தேவன் கொடுத்துள் ளார். ஆதி 26:4 அப்படியே யாக்கோபிற்கும் கொடுத்துள்ளார். ஆதி 28:14 விருத்தசேதன் முள்ளவர்களுக்கு ஊழியம் செய்ததின் மூலம் இயேசு இந்த வாக்கை காத்துக்கொண்டார்ரோ. 15:8 இதுவே இஸ்ரவேலின் நம்பிக்கையா கவும், விசுவாசியின் நம்பிக்கையாகவும் இருக்கிறது. இந்த நம்பிக்கை பெற்ற வருகவே அக்ரிப்பாவை எதிர்த்து நின்ருர் பவுல் அடியார். " தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குவாதம் நிறைவேறும் அப் 26:6 ஆபிரகா மிற்க்கு கொடுத்த இந்த வாக்கை நம்பிதான் யோவானின் தகப்பனுகிய சகரிய" கர்த்தரில் மகிழ்ச்சி கொண்டிருந்தார் என்று லூக் . 1:72ல் காண்கிருேம்." "கர்த் தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்கு கொடுப்பார், "அவர் முடிவில்லாமல் அரசாளுவார்" லூக் 1:33.

6. இரட்சிப்படைய திரு முழுக்கு தேவை யானதாகும் முதலாவதாக, நீதியா னவைகளை நிறை வேற்றவே நமது தலைவராகிய இயேசு திரு முழுக்கு ஏற்றுக் கொண்டாரேயல்லாமல் பாவ மன்னிப்பு அடைய அல்ல மத். 3:15. விசுவாச முள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான்." என்று இயேசு தாமே சொல்லியுள்ளார் மாற 16:16 எல்லா தேசமக்களுக்கும் திருமுழுக்கசு கொடுங்கள் என்ருர். மத் 8:19 திருமுழுக்கின் மூலமாக நாம் ஆபிரகாமின் சந்ததி யாராயும், சுதந்தரராகவும் இருக்கிருேம். கலா3:27-29. ஒருவன் ஜலத்தினுல் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் யோவா. 3:5 திரு முழுக்கானது இயேசு வினுடைய மரணத்திற்கு ஒப்பானதாகும் ரோ. 6:3 அப்போஸதலாகள் திருமுழுக்கு கொடுத்து வந்தார்கள். அப்போ 2:41 அப்படியே பிலிப்புவும், பவுல் அடியார்களுக்கும் திருமுழுக்கு பெற்ருர்கள் அப்போ.8:38,9:18 பவுல் அடியார்களுக்கும் திருமுழுக்கு வேண்டியதாயிற்று அப்போ. 22:16 கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்குப் பிறகும் திருமுழுக்கு முக்கியமாக இருந்து வருகிறதைக் காண்கிருேம்.

அப்போ. 2 : 41 ; 1:8-12; 10:48

7. எதற்காக இயேசுவின் வருகை அருகி லுள்ளது ?

முதலாவதாக, உலக ராஜ்ஜியங்களை எல்லாம் அவருடைய ஆட்சியின் கீழ் கொண்டு வருவார். சகரி 14:9 சர்வலோக ராஜாவாக இருப்பார் ஏசா 9 : 5-7 இயேசுவிற்காக மரித்தவர்களை உயிர்பிக்க யோவா. 6 : 40 அவர்களுக்கு நல்ல பங்கைகொடுக்கவும் வெளி. 22:12 தற்காலிகமாக சிதறுண்டு இருக்கும் இஸ்ரவேல் யூத மக்களை ஒன்று சேர்க்கவும் ரோ. 11:26 எருசலேம் நகரத்தில் இயேசுவின் ராஜ்ஜியத்தை அமைக்கவும் மீகா. 4:1-3 உலகை நீதியோடு அரசாள சங். 72, வெளி 5:10 கடைசியாக உலகில் இன்று காணக்கூடிய, துன்பம் சண்டை மற்றெல்லா அநீதிகளையும் முற்றிலுமாக ஒழிப்பதற்காகவும் இயேசு வருகிறார். 1. கொரி 15:25, வெளி. 21:4

---

தயவு செய்து உனது முகவரியை இதில் எழுதி இந்த பகுதியை மாத்திரம் எங்களுக்கு அனுப்பிவைக்கவும். நன்றி.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விவரங்களை தயவு செய்து எனது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

---

**பெயர் / Name :**

**முகவரி / Address :**

| **The Christadelphians** | **The Gospel Publicity League** |
|---|---|
| Post Box No. 535<br>Fraser Town<br>BANGALORE - 560 005 | G. P. O. Box 159.<br>Hyderabad - 500 001.<br>Andra Pradesh India. |